**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 46/2025 LW- 1 PW-1

| | |
|---|---|
| Name | இருசப்பன் |
| Husband/Father Name | லட்சுமணன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | சிறப்பு காவல் உதவி ஆய்வார்,<br>நெடுஞ்சாலை ரோந்து பிரிவு |
| Age | 54 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 03.02.2026 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராணிப்பேட்டை நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.04.2023 அன்று இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் சீனிவாசன் தலைமையில் நானும், முதல்நிலை காவலர் சரவணன் என்பவரும் மணல் திருட்டு தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில் வேலம் புதிய காலாணி பேருந்து நிலைம் அருகே சென்ற போது அசோக் லைலண்ட் TN 05 R 0839 என்ற வாகனத்தில் 2 யூனிட் ஏரிமண் கடத்தி வந்தவரை பிடித்து விசாரணை செய்த போது அவர் பெயர் குமரேசன் என்றும் வேலம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் தெரிவித்தார்.

அவரை பிடித்து விசாரணை செய்த போது மணல் திருடியதாக ஒப்புக்கொண்டார்கள். அப்போது உதவி ஆய்வாளர் சீனிவான் அவர்கள் பார்வை மகசர், மாதரி வரைபடம் தயார் செய்தார் அதில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் **அ.சா.ஆ.1** ஆகும்.மணல் ஏற்றி வரப்பட்ட வாகனம் மற்றும் மணலை கைபற்றி கைபற்றுதல் மகசர் தயார் செய்தார். அதற்கு நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். அந்த கைபற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும்.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட மணலில் 1கி.கி. மாதிரிக்காக எடுத்துக் கொண்டு மற்ற மணலை வேலம ஏரியில் கொட்டி அழிப்பு மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அவ்வாறு தயார் செய்த அழிப்பு மகசரில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அவருக்கு துணையாக நான் இருந்தேன். வழக்கு தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் தான் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். மணல் திருட்டு தொடர்பாக தனிநபரோ, பொதுப்பணித்துறையினரோ புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். ரகசிய தகவல் என்று கூறியுள்ளேன் அந்த தகவலை யார் கூறினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்திற்கு நாங்கள் மூவரும் சென்றதை பற்றி பொதுக்குறிப்பிட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நாங்கள் சம்பவ இடம் எவ்வாறு சென்றோம் என்றால் நானும்

முதல்நிலை காவலரும் ஒரு வாகனத்திலும், உதவி ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம்.

சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திருப்போம் என்றால் ஒரு மணி நேரம் இருந்திருப்போம். சம்பவ இடமான வேலம் என்பது குடியிருப்பு நிறைந்த பகுதி என்றால் ஆமாம். அவர்களில் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அழிப்பு மகசரை தயார் செய்ய உதவி ஆய்வாளருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். ஆய்வாளரின் கட்டளையின் படி செய்தார். என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்த போது ஆய்வாளர் கட்டளையின் பேரில் தான் அழிப்பு மகசர் தயார் செய்யப்பட்டது என்ற விவரத்தை கூறியுள்ளேனா என்றால் இல்லை. மணலை எங்கு கொட்டி அழிக்கப்பட்டது என்பதற்கான விவரம் தாக்கால் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரி மணல் எதையும் கடத்தி வரவில்லை புள்ளி விவர கணக்கிற்காக எதிரிகள் மீது ஒரு பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்திலேயே வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2026.02.04 11:45:46 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.